සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான**

**முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 (II)**

**காலம் - 03 மணித்தியாலங்கள்**

**நிர்வாகம் (02-IV)**

විභාග අංකය
Index No / சுட்டெண்
.......................................

- **ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

---

1. i. பொதுச் சேவை ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கமைய, ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படக்கூடிய நியமன வகைகள் யாவை? (03 புள்ளிகள்)
   ii. எந்தச் சந்தர்ப்பங்களில் நியமன முற் தேதியிடல் மறுக்கப்படலாம்? (04 புள்ளிகள்)
   iii. வினைத்திறன்காண் தடைதாண்டல் தவிர, சேவை பிரமாணக்குறிப்பில் உள்ளடங்க வேண்டிய கட்டாய விடயங்கள் யாவை? (05 புள்ளிகள்)
   iv. சேவை பிரமாணக்குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ள யாதேனும் பிரிவுகளை அல்லது நிபந்தனையையும் திருத்துவதற்கான நடைமுறையை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)
   v. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை பூர்த்திசெய்யத் தவறிய அலுவலரொருவர் தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கையை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

2. i. வெளிநாட்டு புலமைப்பரிசில் மூலம் முதுமானிப் பட்டப்படிப்பைத் தொடர சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்குவதற்கான நடைமுறை யாது? அதை அங்கீகரிக்க வேண்டிய அதிகாரி யார்? (02 புள்ளிகள்)
   ii. சம்பளத்துடனான விடுமுறையில் வெளிநாட்டிற்குச் செல்லும் அதிகாரியொருவர் மீண்டும் இலங்கைக்குத் திரும்பிய பின்னர் கட்டாய சேவைக் காலம் ஒன்றில் சேவையாற்ற வேண்டும். அத்தகைய கட்டாய சேவை காலம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)
   iii. தாபனவிதிக் கோவை ஏற்பாடுகளின் படி, பயிற்சி ஒன்றிற்கான வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பிக்கும் போது கைச்சாத்திடப்படுகின்ற ஒப்பந்த நியதிகளுக்கு இணங்கி ஒழுகவில்லை என்றால், "பயிற்சிக்காக செலவிடப்படும் தொகை" இனை மீளச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. இங்கு 'பயிற்சிக்காக செலவிடப்படும் தொகை' என்றால் என்ன என்பதை விளக்குக. (05 புள்ளிகள்)
   iv. கட்டாய லீவு என்பதன் மூலம் கருதப்படுவது என்ன? விளக்குக. (04 புள்ளிகள்)
   v. கடமையில் ஈடுபட்டுள்ள போது விபத்திற்குள்ளாகும் அலுவலரொருவர் தொடர்பாக லீவு வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் யாவை? (05 புள்ளிகள்)

3. i. தகுதிகாண் காலத்தை இன்னும் பூர்த்தி செய்யாத, புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு பிரசவ விடுமுறை வழங்கமுடியாது என்ற கருத்து உள்ளது. இந்தக் கருத்து தொடர்பான உங்களது அவதானிப்புகளை விளக்குக. (08 புள்ளிகள்)

ii. அவர் கர்ப்பமாக இருப்பதால் கடமைக்கு அறிக்கையிடும் மற்றும் புறப்படும் நேரங்கள் தளர்த்தப்படலாம் என அரச அலுவலரான அவரது கணவர் குறிப்பிடுகிறார். அத்தகையதொரு நிவாரணம் வழங்க முடியுமா? அப்படியானால், அதற்கான விதிகளை விளக்கவும். (04 புள்ளிகள்)

iii. அவரது கணவரும் அரசு அதிகாரியாக இருப்பதால், அவர் தந்தைக்குரிய விடுமுறையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதம் பற்றி சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

iv. கடமையை கவனித்தல் (cover-up) என்றால் என்ன என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

4. i. அரை அரச நிறுவனங்களுக்கு வளவாளர்களை வழங்குவது தொடர்பான தாபனவிதிக் கோவை ஏற்பாடுகளை விளக்குக. (07 புள்ளிகள்)

ii. குறித்தவொரு பல்கலைக்கழகத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் முதுமானிப் பட்டப்படிப்புக்கு வெளியக விரிவுரையாளராக இணைந்துகொள்ளும் படி அலுவரெ ஒருவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கான கட்டணத்தை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பதை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

iii. அதிகாரியொருவருக்கு மேலதிக நேரப்படி வழங்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை? என்பதை விளக்குக. (05 புள்ளிகள்)

iv. மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பாக விண்ணப்பிக்கக்கூடிய நேர வரம்புகள் யாவை? என்பதைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

5. உங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் திரு.ஆர்யா அவர்கள், அரசியல் உரிமை உள்ள அலுவலரொருவராவார். தொழிற்சங்க செயற்பாடுகள் மூலம் தீவிர அரசியல் தொடர்புகளை கட்டியெழுப்பிய அவர், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்துள்ளார்.

i. அரசியல் உரிமை அற்ற அலுவலர்கள் யார்? (04 புள்ளிகள்)

ii. அரசியல் உரிமை உள்ள அலுவலர்களுக்கு உரித்தான சலுகைகள் யாவை? (03 புள்ளிகள்)

iii. தேர்தலொன்றில் போட்டியிட விரும்பினால் திரு. ஆர்யா அவர்கள் எவ்வாறு லீவினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை விளக்குக. (03 புள்ளிகள்)

iv. திரு.ஆர்யா அவர்கள் ஒரே அலுவலகத்தில் பல ஆண்டுகள் பணிபுரிந்தமை காரணமாக வருடாந்த இடமாற்றக் குழு எடுத்த தீர்மானத்தின்படி வேறு அலுவலகமொன்றிற்கு மாற்றப்பட்டுள்ளார். அவர் செயற்பாட்டு அரசியல் கட்சியின் உறுப்பினராக இருப்பதால், தாபனவிதிக் கோவை ஏற்பாடுகளின்படி தனது இடமாற்றம் தவறானது என்று அவர் கூறுகிறார். அவருடைய கூற்றுப் பற்றிய உங்கள் அவதானிப்புகள் மற்றும் முடிவுகள் என்ன? (05 புள்ளிகள்)

v. ஒரு உள்ளூராட்சி சபையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர் ஒருவருக்கு கிடைக்கும் சலுககளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

6. உங்கள் நிறுவனத்தில் இரண்டாம் நிலை மட்ட பதவிக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியான திரு.ஜிகான் அவர்கள் முன்னர் அரச சேவையில் கடமையாற்றவில்லை. நியமனக் கடிதத்தின்படி அவரது சம்பளம் ரூ. 28,940.00 என குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது நியமனத் தேதி ஜூலை 12 ஆகும். திரு. ஜிகான் அவர்கள் நியமனம் செய்யப்பட்ட அதே நாளில் கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

i. திரு. ஜிகான் அவர்களுக்கு ஜூலை மாதத்தில் கிடைக்க வேண்டிய சம்பளம் எவ்வளவு? (03 புள்ளிகள்)

ii. சம்பளப்படியேற்றம் ஒன்றைப்பெற பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடுகள் என்ன? (04 புள்ளிகள்)

iii. திரு. ஜிகானின் அடுத்த சம்பள படியேற்றம் அவரது பணிகளைக் மேற்பார்வை செய்ததன் பின்னர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. சம்பள ஏற்றமொன்றை தற்காலிக இடைநிறுத்தம் செய்தல் என்றால் என்ன? விளக்குக. (04 புள்ளிகள்)

iv. சம்பள உயர்வை நிறுத்தி வைப்பதற்கு தீர்மானித்த பிறகு, நிறுவனத்தின் தலைவர் எடுக்க வேண்டிய அடுத்த நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

v. நிரந்தர பதவியில் பணியாற்றும் அலுவலரொருவர், அந்த பதவிக்கு மேலதிகமாக மற்றொரு பதவியில் பதிற்கடமையாற்ற நியமிக்கப்படுகிறார். அவருக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய விதம் பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

7. பின்வரும் தலைப்புக்களில் நான்கு (4)தொடர்பில் சிறு குறிப்பு எழுதுக.

i. ஆரம்ப விசாரணை

ii. அரச அலுவலர் ஒருவரின்பொதிவான நடத்தை

iii. சம்பள ஏற்றத்தை பிற்போடல்

iv. குற்றச்சாட்டுப் பத்திரம்

v. இரண்டாம் அட்டவணையின் கீழான தவறுகள் (5 X4=20 புள்ளிகள்)

**************